# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2124/33 - 2019 මැයි මස 24 වැනි සිකුරාදා - 2019.05.24

*2124/33 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: கடு/காணி/01/134/CEB.
காணி அமைச்சின் இல.: 4/3/2016/CEB/23.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்ட கடுவளை பிரதேச செயலகப் பிரிவில், 476/ஏ, மாலம்பே (மேற்கு) கிராம அலுவலர் பிரிவின் மாலம்பே கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. ப. 9811 இல் காட்டப்பட்ட 0.4199 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் :

ஆரம்ப வரைபட இல. 9811 இல்

*1.* **துண்டு இல. 01**
காணியின் பெயர் : எட்டஹெரலியகஹகும்புர; விபரம் : வயல்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: திருமதி எச். லீலாவத்தீ சில்வா மற்றும் ஏனையோர், இல. 148/8, “செத்சிறி”, தலாஹேன, மாலம்பே.

*2.* **துண்டு இல. 02**
காணியின் பெயர் : எட்டஹெரலியகஹகும்புர; விபரம் : வயல் (உயர் மின் அழுத்தமுடைய இரண்டு மின் கம்பங்கள் உண்டு); உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: திரு எஸ். எல். சூரியஆரச்சி, திருமதி ஏ. ஏ. ஆர். சுவர்ணா பெரேரா மற்றும் திருமதி ஏ. ஏ. இந்திரா காந்தி பெரேரா, “ரம்யா” போரே, அத்துருகிரிய.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மு. ப. 10.00 மணிக்கு கடுவளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏ. டீ. வை. ஆனந்தனி,
பிரதேச செயலாளர்,
கடுவளை.

பிரதேச செயலகம்,
கடுவளை.

6 - 108

**திருத்தம்**

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.:ல/பிசெ/3/3/3/1.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/96/FR/57.

சுற்றாடல் பாதுகாப்பிற்காக எடுக்கப்படவுள்ள பலகொல்லயாய எனும் காணி தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட இல. 1438/6 மற்றும் 2006.03.27 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் மும்மொழியிலும் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலுடன் தொடர்புடையதாகும். குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பூ. பூ. வ. 13, பத்திர இல. 80, குறைநிரப்பி இல. 24 ஐக் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 2056 எனக் குறிப்பிடப்படுவதுடன், எல்லைகள் வடக்கு : துண்டு இல. 1153 3/3 மற்றும் 1167; கிழக்கு : துண்டு இல. 1168, 1184; தெற்கு : துண்டு இல. 1168, 1184; மேற்கு : துண்டு இல. 1184, 1164 ஆகும். குறித்த காணித் துண்டுக்கான உரித்து தொடர்பான பரிசீலனை மீண்டுமொருமுறை 2019.06.27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கின்றேன்.

6 - 109

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.